# பொதுமக்களுக்கான அறிவித்தல்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

# பிரமிட் திட்டங்கள் சட்டவிரோதமானவை

"பொருட்களை/மெய்நிகர் நாணயங்களை வர்த்தகம் செய்வதனூடாக "இலகுவாக பணம் உழைத்தல்" அல்லது இணையவழியில் இலாபங்களை ஈட்டுதல் மற்றும் சிரமமின்றி உங்களை செலவந்தராக்குதல் போன்ற வாய்ப்புகளை வழங்கி பிரமிட் திட்டங்கள் தொழிற்படுத்தப்படுகின்றன.

இலங்கைச் சட்டத்தின் கீழ் சட்டவிரோதமான பிரமிட் திட்டமொன்றாக இது இருக்கலாம் என்பது பற்றி எச்சரிக்கையாக இருங்கள்.

பிரமிட் திட்டங்களைத் தொழிற்படுத்துகின்ற பல கம்பனிகளை இலங்கை மத்திய வங்கி இனங்கண்டு ஊடகங்கள் வாயிலாக பொதுமக்களுக்கு அறிவித்துள்ளது. எனினும், வெளியிடப்பட்ட அட்டவணை முழுமையானதல்ல என்பதனையும் இலங்கை மத்திய வங்கியினால் இன்னும் புலனாய்வு செய்யப்பட்டுவருகின்ற பிரமிட் திட்டங்களைத் தொழிற்படுத்துகின்ற வேறு நிறுவனங்கள் இருக்கலாம் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

புதிய பங்கேற்பாளர்களைக் கவருவதற்கு பிரபல்யமான பொது விளையாட்டை மற்றும் மத நிகழ்வுகளை விளம்பரப்படுத்தி அனுசரணை அளிப்பதன் வாயிலாக தமது திட்டங்களை பிரபல்யப்படுத்துவதற்கு சில பிரமிட் திட்ட ஊக்குவிப்பாளர்கள் முனைவதுடன் இணைந்துகொள்வதற்கு ஊக்குவிப்புக் குறியீடுகள்/ நிறுவனசார் குறியீடுகள் போன்றவற்றை பயன்படுத்தும் பாங்கினையும் கொண்டுள்ளனர்.

அதற்கமைய, சட்டத்தினால் தண்டிக்கப்படக்கூடிய பிரமிட் திட்டங்கள் பற்றி விழிப்பாக இருக்குமாறும் நேரடியாக அல்லது நேரடியற்று அத்திட்டங்களில் பங்கேற்பதை தவிர்க்குமாறும் பொதுமக்களுக்கு ஆலோசனை வழங்கப்படுகின்றது.

இலங்கை மத்திய வங்கி, இல. 30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01
☎ (Hotline) 1935 / +94 11-2477966